**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி**

**முன்னிலை : திரு. என். ஞானசம்பந்தம், பி.ஏ.பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பழனி.**

**2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 09 ஆம் நாள், திங்கட்கிழமை**

**இ.ம.எண்.12/2023**
**இன்**
**அ.வ.எண்.88/2019**

1. கருப்புச்சாமி
2. சண்முகசுந்தரம் --- மனுதாரர்கள் /1, 2 பிரதிவாதிகள்

// எதிர் //

1. ஏ. முகம்மது யூசுப்
2. ஏ. சேட்டு முபாரக் ---எதிர்மனுதாரர்கள்/வாதிகள்
3. நிர்வாக அதிகாரி, பாலசமுத்திரம் பேரூராட்சி
4. வட்டாட்சியர், பழனி.
5. மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல் ---எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது என் முன்பாக இதுநாள் வரையிலும் இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையின் கீழ் இருந்து வந்தும் மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.ஹரிஹரன் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.எஸ்.அன்வர்தீன் அவர்கள் முன்னிலையாகியும், 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், இறுதி விசாரணைக்காக 07.10.2023 ஆம் தேதி வந்தபோது, இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்த நீதிமன்றம் வழங்கிடும்,

**உத்தரவு**

மனுதாரர்கள்/ 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் 12.06.2023ம் நாள் சாட்சியம் முடிக்கப்பட்ட PW1 சாட்சியை மீண்டும் அழைத்து விசாரணை செய்ய வேண்டியுள்ளதால், வாதிகள் தரப்பு வழக்கினை Re-open செய்துகொள்ள

உத்தரவிடுமாறு மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகளால் சி.பி.சி. பிரிவு 151ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்கள் /1, 2 பிரதிவாதிகள் தரப்பு தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம் பின்வருமாறு:–**பிராது மாதிரி வரைபடத்தில் நீலவர்ணமிட்ட சர்வே எண்.829/10 மற்றும் ' A, B, C, D ' பகுதி எதிர்மனுதாரர்கள் / வாதிகளுக்கு கூட்டாக பாத்தியப்பட்ட பொதுப்பாதை பகுதி என்று விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை கோரியும், பிற பரிகாரங்கள் கோரி வழக்கு தாக்கல் செய்திருந்ததில், மனுதாரர்களால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டும், வாதிகள் தரப்பில் PW1 சாட்சிய வாக்குமூலம் தாக்கல் செய்திருந்ததில், 12.06.2023ம் நாள் குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டு இருந்ததில், மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் பணிநிமித்தமாக வெளியூர் நீதிமன்றத்திற்கு சென்று இருந்ததால் அன்று PW1 சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய இயலவில்லை. மேலும் வழக்கு அழைக்கப்பட்ட போது மனுதாரர்களது தரப்பு வழக்கறிஞரால் அவகாசம் கோரப்பட்டதில், மாண்பமை நீதிமன்றம் மனுதாரர்களை அழைத்தும், மனுதாரர்கள் ஆஜராகததால், PW1 சாட்சியை மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படாததால், மனுதாரர்களது தரப்பு சாட்சியத்தை முடிக்கப்பட்டும், PW1 சாட்சியை 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டதின் பேரில், PW1 சாட்சியம் முடிக்கப்பட்டு, வாதிகள் தரப்பு மற்ற சாட்சியத்திற்காக இன்று வாய்தா ஏற்பட்டுள்ளது.

மனுதாரர்கள் தரப்பு எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் சம்மந்தமாகவும், மனுதாரர்களது தரப்பு ஆவணங்கள் சம்மந்தமாகவும் PW1 சாட்சியிடம் மனுதாரர்கள் குறுக்கு விசாரணை செய்ய வேண்டியுள்ளதால், 12.06.2023ம் நாள் மனுதாரர்கள் தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்ட PW1 சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய வாதிகள் தரப்பு

வழக்கினை Re – open செய்துகொள்ள உத்திரவிட வேண்டியுள்ளது. இல்லையெனில் மனுதாரர்களுக்கு ஈடு செய்ய முடியாத பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும். இதனால் எதிர்மனுதார்கள்/ வாதிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என மனுத்தாக்கல்.

**<u>3. எதிர்மனுதாரர்கள் /வாதிகள் தரப்பு தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் பின்வருமாறு:–</u>** இந்த எதிர்மனுதாரர்கள்/ வாதிகள், பிராது சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து, 1ம் வாதியான PW1– ஐ குறுக்கு விசாரணை செய்ய நீதிமன்றம் பல சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட்டு, அதனை பயன்படுத்திக்கொள்ளாமல் வேண்டுமென்றே அசல் வழக்கை காலதாமதப்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு கடந்த 12.06.2023ம் தேதி PW1–ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் விட்டுவிட்டு அதன்பின்னிட்டு எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு PW2 விசாரணை முடிக்கப்பட்ட பின்பு அதாவது 2 மாதங்கள் கழித்து மீண்டும் PW1 சாட்சியத்தினை விசாரணை செய்ய வேண்டி அதனை Re – open செய்ய இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்புடையதல்ல. ஏனென்றால் வழக்கறிஞர் வெளியூர் நீதிமன்றம் சென்று விட்டார் என்று கூறியுள்ளார். ஆனால் நீதிமன்றம் போதிய வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ள நிலையில், அதனை பயன்படுத்திக்கொள்ளாமல் தற்போது இந்த மனுவை தாக்கல் செய்திருப்பது எவ்வகையிலும் ஏற்புடையதல்ல. அதனால் எதிர்மனுதாரர்கள் / வாதிகளின் விசாரணையை Re – Call செய்ய வேண்டிய அவசியம் கிடையாது. எனவே இம்மனுவை எதிர்மனுதாரர்கள் / வாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியது என எதிருரை தாக்கல்.

**4. 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் /3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் பின்வருமாறு:–** 1, 2 எதிர்மனுதாரர்கள் / வாதிகள், பிராது சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து, 1ம் வாதியான PW1–ஐ குறுக்கு விசாரணை செய்ய நீதிமன்றம் பல சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட்டு, அதனை பயன்படுத்திக்கொள்ளாமல் வேண்டுமென்றே அசல் வழக்கை காலதாமதப்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு கடந்த 12.06.2023ம் தேதி PW1–ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் விட்டுவிட்டு அதன்பின்னிட்டு எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு PW2 விசாரணை முடிக்கப்பட்ட பின்பு அதாவது 2 மாதங்கள் கழித்து மீண்டும் PW1 சாட்சியத்தினை விசாரணை செய்ய வேண்டி அதனை Re – open செய்ய இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்புடையதல்ல. ஏனென்றால் வழக்கறிஞர் வெளியூர் நீதிமன்றம் சென்று விட்டார் என்று கூறியுள்ளார். ஆனால் நீதிமன்றம் போதிய வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ள நிலையில், அதனை பயன்படுத்திக்கொள்ளாமல் தற்போது இந்த மனுவை தாக்கல் செய்திருப்பது எவ்வகையிலும் ஏற்புடையதல்ல. அதனால் எதிர்மனுதாரர்கள் / வாதிகளின் விசாரணையை Re – open செய்ய வேண்டிய அவசியம் கிடையாது. எனவே இம்மனுவை 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் /3 முதல் 5 பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியது என எதிருரை தாக்கல்.

4. இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய விசயம் யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5. இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. அசல் வழக்கானது விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணையில் இருந்து வந்த சமயத்தில் வா.சா.1 சாட்சி கடந்த 12.06.2023ம் தேதியன்று குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டு இருந்தது. அன்றைய தினம் மனுதாரரின் வழக்கறிஞர் பணிநிமித்தமாக வெளியூர் நீதிமன்றத்திற்கு சென்று விட்டதால் குறுக்கு விசாரணை செய்ய இயலவில்லை என்றும், அதனால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டதாலும், மீண்டும் வா.சா.1 சாட்சி குறுக்கு விசாரணை செய்ய வழக்கை மீண்டும் திறக்க வேண்டும் என்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. வா.சா.1 கடந்த 24.03.2023ம் தேதியன்று முதல் விசாரணை முடிக்கப்பட்டு, பின்னிட்டு கடந்த 07.06.2023ம் தேதியன்று குறுக்கு விசாரணை பகுதியாக செய்யப்பட்டு, பின்னிட்டு வாய்தா வழங்கப்பட்டு, கடந்த 12.06.2023ம் தேதியன்று குறுக்கு விசாரணை செய்ய இந்த மனுதாரர் தரப்பில் முன் வராததால் அன்றைய தினம் முடிக்கப்பட்டது. பின்னிட்டு வா.சா.2 சாட்சி கடந்த 12.09.2023ம் தேதியன்று முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, பின்னிட்டு வா.சா.1 மேலும் குறுக்கு விசாரணை செய்ய இவ்வழக்கை திறப்பதற்கு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் சாட்சிகள் முடிக்கப்படவில்லை. வா.சா.1 ஐ பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் எனில் வா.சா.1 ஐ மீண்டும் அழைக்க மனு செய்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு மீண்டும் சாட்சியை அழைக்க மனு தாக்கல் செய்யாமல் வாதி தரப்பு சாட்சி விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருக்கும் இவ்வழக்கை மீண்டும் திறக்க வேண்டும் என்று தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல.

8. எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக மனுதாரர் இதுபோன்ற மனுவை தாக்கல் செய்து காலம் கடத்தி

வருவதாக எதிர்வாதம் முன்வைக்கப்பட்டது. எனவே சாட்சியை மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய மீண்டும் அழைப்பதற்கு மனு செய்யாமல் வாதி தரப்பு சாட்சி முடிக்கப்படாத நிலையில் இவ்வழக்கை மீண்டும் திறக்க வேண்டும் என மனு தாக்கல் செய்துள்ளது நிராகரிக்க வேண்டிய ஒன்றாகும்.

**இறுதியாக இம்மனு எதிர்மனுதாரர்களின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் ஒப்பெழுதப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 09 ஆம் நாளாகிய இன்று பகரப்பட்டது.

N GNANASAMBANDAM
Digitally signed by N GNANASAMBANDAM
Date: 2023.10.09 18:11:57 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.

<u>**மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி:–**</u> இல்லை.
<u>**மனுதாரர்கள் /1, 2 பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:–**</u>இல்லை.
<u>**எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி:–**</u> இல்லை.
<u>**எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:–**</u>இல்லை.
<u>**எதிர்மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி:– இல்லை.**</u>
<u>**எதிர்மனுதாரர்கள் /3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:–**</u>இல்லை.

N GNANASAMBANDAM
Digitally signed by N GNANASAMBANDAM
Date: 2023.10.09 18:12:04 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.